அறத்தான் வருவதே இன்பம்

# தமிழ் அறம்



உள்ளே...


ஆசிரியர் தலையங்கம் .................................. 1

நெஞ்சமே அஞ்சாதே நீ!

முயன்றால் முடியும்...........................................2

இல்லறம் இனிக்க..................................................3

சங்க இலக்கியம் ...................................................4

கவிதைகள். .......................................................... 6



சிந்தனை 8 செயல் 8 ஆசிரியர் மரு.த.இராசலிங்கம் சூலை 2026

**பண்புள்ள தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!**

**மக்களின் அண்மைக்கால நாகரிகம்.**

தமிழினத்தின் தொன்மைக்கால நாகரிகம் பெருமை வாய்ந்தது என்பதில் யாருக்கும் ஐயமில்லை. ஓர் இனத்தின் பண்பாடு நாளுக்கு நாள் வளர்ந்து சிறந்தோங்கி நிற்பதே நாகரிகம் எனப்படும். பண்பாட்டின் அடையாளமாக விளங்குவதே நாகரிகம்!. ஆதிச்சநல்லூரைப் பார்த்தீர்களா? சிவகளையைப் பார்த்தீர்களா? கீழடியைப் பார்த்தீர்களா? என்று பழம்பெருமை பேசியே தமிழர்கள், தமிழ்நாட்டவர் அண்மைக்காலத்தில் பண்பட்ட இனமாக வளராமல் கீழே போய்க்கொண்டிருக்கிறார்கள். நாகரிகத்தில் கீழான நிலையில் இருக்கின்றோம் என்ற உணர்வே இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எதற்கு முன்னுரிமை கொடுத்து வாழ வேண்டும் என்ற அடிப்படை புரிதலே இல்லாமல் பெரும்பாலான மக்கள் தான்தோன்றித் தனமாக வாழ்ந்து, வருங்காலத் தலைமுறைக்கும் தவறான எடுத்துக்காட்டாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தங்களைத், தினம் தினம் அழகுபடுத்திக் கொள்ளும் மக்கள், சுற்றுச்சூழலைப் பற்றி சிறிதும் அக்கறை கொள்வதில்லை. சுற்றுப்புறத்தின் அழகு, தூய்மைப் பற்றி அவர்கள் சிந்திப்பதே இல்லை. குப்பை மேட்டின் மீது கோபுரம் இருப்பதை ஒரு குறையாகவே அவர்கள் எண்ணுவதில்லை.

கீழடியைத் தோண்டினால் தொல்லியல் பொருட்கள் கிடைக்கின்றன. மகிழ்ச்சிதான். ஆனால் ஒரு ஆயிரம் ஆண்டுகள் கழித்து பூமியைத் தோண்டி ஆய்ந்தால், மக்காத நெகிழிப் (பிளாஸ்டிக்) பைகள், தட்டுகள், குவளைகள்தான் கிடைக்கும்.

மறுசுழற்சி பண்ணக்கூடிய நெகிழியால் கெடுதல் அதிகம் இல்லை. ஆனால் மிகப்பெரிய கேடு விளைவிக்கக் கூடிய ஒருமுறைப் பயன்பாட்டு நெகிழிப் பொருட்களுக்கு மக்கள் அடிமையாகிப் போன, வாழ்வியல் நாகரிகத்தை என்னவென்று சொல்வது?. கையில் வாங்கி உடனே தலையில் வைக்கும் பத்து ரூபாய் பூவை கூட ஒரு பிளாஸ்டிக் பையில் போட்டு வாங்கும் போக்கை என்னவென்று சொல்வது ?

மக்கள்தான் திருந்தவில்லை. நாட்டின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டிய அரசாங்கம் என்ன செய்கிறது ? ஒருமுறை மட்டும் பயன்படுத்திவிட்டு தூக்கி எறியும் நெகிழிப் பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களை இழுத்து மூட வேண்டியதுதானே? ஏன் செய்யத் தயங்குகிறது அரசாங்கம் ?. வருங்காலத் தலைமுறையைப் பற்றிய அக்கறை இன்மைதான் காரணம். இது ஒரு பக்கம் என்றால், இன்னொரு பக்கம் - பெரிய பெரிய நெகிழிப் பதாகைகளின் பயன்பாடு அதிகரித்து சுற்றுச்சூழலை சீர்குலைத்து வருகின்றது.

கையால் எழுதப்படும் அறிவிப்பு பலகைகளுக்கு மாற்றாக, வண்ண, வண்ண நெகிழிப் பதாகைகள் புழக்கத்துக்கு வந்தன. அவற்றின் பயன்பாடு ஒரு குறிப்பிட்ட அளவுக்குள், கட்டுக்குள் இருந்தால் பெரிய அளவில் தீமை இல்லை. ஆனால் நாம் இன்று காண்பதென்ன? அரசியல் கட்சிகளும், சினிமாக்காரர்களும் தொடங்கி வைத்த இந்தத் தீங்கு பரவலாக எல்லோரையும் பற்றிக் கொண்டது. கோவில் கொடையா? திருமண நிகழ்வா? காதுகுத்து, கிடாவெட்டா?. பெரிய, பெரிய நெகிழிப் பதாகைகள் தெருக்களை அடைத்துக் கொண்டு காட்சித் தருகின்றன. குறிப்பாக கிராமத்துக் கோவில் விழாக்களில் இளைஞர்கள் பல்லாயிரம் ரூபாய் செலவு செய்து ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு கோவிலும், சாமியும் வெளியில் தெரியாத அளவுக்கு பதாகைகள் வைத்து அதிலே மகிழ்ச்சி அடைகின்றனர். சுற்றுப்புறம் குப்பை மேடாக இருக்க, அங்கே வண்ணப் பதாகை வைப்பதே கொண்டாட்டம் என்று எண்ணும் போக்கே இன்றைய நாகரிகமாக வளர்ந்துள்ளது......அச்சம் தருவதாக, அநாகரிகமாகத் தோன்றுகிறது.



## நெஞ்சமே அஞ்சாதே நீ!

டாக்டர். எம்.எஸ்.உதயமூர்த்தி

திட்டமில்லாத வாழ்க்கை பயனற்றது - உண்மைதான். அதற்காகத் திட்டம் திட்டம் என்று வாழ்க்கையில் சுதந்திரத்தைப் பறித்துவிடக் கூடாது. திட்டம் மனிதர்களுக்காக இருக்கிறதே தவிர, மனிதர்கள் திட்டங்களுக்காக இல்லை. சமுதாயக் கோட்பாடுகளும், சட்டங்களும் மனிதர்களுக்காக இருக்கின்றனவே அன்றி அவற்றிற்காக நம் வாழ்க்கையைத் திசை திருப்பிக் கொள்ளக் கூடாது.

நெறியான வாழ்க்கை வேண்டியதுதான். ஆனால் நெறியான வாழ்க்கை என்ற பெயரில் அம்மைக் குத்திக் கொள்வதற்குக்கூட விரும்பாத முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாயைப் பற்றி எண்ணிப் பாருங்கள். நெறியுடன், திட்டப்படி வாழ்வதில் ஒரு பத்திரம் இருக்கிறது. ஒரு பாதுகாப்பு இருக்கிறது. அந்த நெறியுடன் கூட வளைந்து கொடுக்கும் ஒரு மனோபாவம் இழைய வேண்டும்.

எது எப்படி நடக்கும்?. எப்படி முடியும்? என்று எல்லாவற்றையும் தெரிந்து வைத்திருப்பதில் ஒரு பத்திரம் இருக்கிறது; பாதுகாப்பு இருக்கிறது. ஆனால் அங்கே புதுமை இல்லை; சவால் இல்லை. சிந்தித்துப் பாருங்கள். இந்த உலகில் யார் பத்திரமாய் இருக்கிறார்கள்? பத்திரம், பாதுகாப்பு என்ற வார்த்தைகளால் நம் வாழ்க்கையை முடக்க விடாதீர்கள். வெளி உலகப் பாதுகாப்பை நாடித்தான் உலகிலுள்ள அதிக மனிதர்கள் வாழ்கிறார்கள். பல வகைகளில் மனிதன் பாதுகாப்பு நாடி ஓடுகிறான் வாழ்வில்.



## முயன்றால் முடியும்!

முனைவர்.லெ.பாஸ்கர்

மாற்றம் என்பது முதலில் சிந்தனையில் வர வேண்டும். பின்புதான் முன்னேற்றம். யானை ஒன்றின் காலில் சங்கிலியால் கட்டப்பட்டிருப்பதைப் பார்த்த சிறுவன் ஒருவன், யானைப்பாகனிடம் கேட்டான். “அந்த யானையால் சங்கிலியை அறுத்துக் கொண்டுப் போக முடியாதா? என்று. அதற்கு அந்த யானைப்பாகன் சொன்னான், “அறுத்துக் கொண்டுப் போக முடியும், ஆனால் போகாது” என்று சொன்னான். ஏன் என்று சிறுவன் கேட்க, யானைப்பாகன் சொன்னான். “யானை கன்றாக இருக்கும் போதே சங்கிலியால் காலைக் கட்டிவிடுவோம். அதுவும் சங்கிலியிலிருந்து விடுவித்துக் கொள்ளப் பலமுறை முயற்சி செய்யும். ஆனால் போதிய பலம் இல்லாததால் அறுக்க முடியாது. எனவே தன்னால் முடியாது என்று நாளடைவில் முயற்சியைக் கைவிட்டு விடும். வளர்ந்த பிறகும் அது தன் வலிமையை உணராமல், பழைய மனநிலையிலேயே இருந்து விடும். ஓடவும் முயற்சி செய்வதில்லை.”

இது யானைக்கு மட்டுமல்ல, மனிதர்களாகிய நமக்கும் பொருந்தும். சிறுவயதில் நாம் வலிமையற்று இருக்கும் போது நமது முயற்சிகள் சில தோல்வி அடைந்திருக்கலாம். அதுவே நம் சிந்தனையில் படிந்து, நம்மால் முடியாது என்ற முடிவுக்கு வந்துவிடுகிறோம். எனவே முயற்சியைக் கைவிட்டு விடுகிறோம். அது தவறு!. நேர்மையான ஒன்றை அடைவதற்கு நாம் தொடர்ந்து முயற்சி செய்தால், முடியாதது என்று எதுவுமே இல்லை. சிந்தனையில் தொடர்ந்த முயற்சி, செயலில் தொய்வில்லாத முயற்சி இருந்தால் வெற்றி நிச்சயம். நம்மால் முடியும்! என்று நம்பிக்கையோடு முயலும் போது மாற்றம் நம் வாழ்வில் முன்னேற்றமாக மலரும்.



சென்ற இதழ் தொடர்ச்சி....

## 3. நலனைப் பேணுங்கள்!

உலகின் விலைமதிப்பற்றக் கண்ணீர் - கணவன் துன்பம் கண்டு மனைவி வடிக்கும் கண்ணீர்; மனைவியின் துன்பத்தைத் தாளாது கணவன் வடிக்கும் கண்ணீர்.

நலனைப் பேணுதல் என்பது, உடல் சார்ந்தது மட்டுமல்ல உள்ளம் சார்ந்ததும் கூட. கணவனின் நலனைப் பேணுவதில் மனைவி எடுத்துக் கொள்ளும் அக்கறையும், மனைவியின் நலனைப் பேணுவதில் கணவன் காட்டும் ஈடுபாடும் இல்லறத்தை இனிமையாக்கும்.

கணவன் மனைவி நலம் பேணுதலின் சிறப்பை சங்க இலக்கியக் காட்சிகள் நமக்கு அழகாக எடுத்துக் காட்டுகின்றன.

மனைவியைக் கணவன் எவ்வாறு காக்க வேண்டும் என்பதனை காட்டில் காணுகின்ற காட்சிகளை நம் கண் முன்னால் கொண்டுவந்து நிறுத்தி, உவமையழகுடன் எடுத்துக் காட்டுகிறது பாலைக்கலி.

காட்டிலே கோடைக்காலத்தில் நீர்நிலையைக் காண்பதே அரிது. அப்படியே நீர்நிலை இருந்தாலும், அதிலே சிறிதளவு நீர்தான் இருக்கும். அந்த நீரையும் துடி போன்ற அதாவது உடுக்கை போன்ற பாதங்களை உடைய யானைக்கன்று கலக்கிவிடுமாம். அவ்வாறு கலங்கிய நீரை, தெளிந்தவுடன் களிறு எனப்படும் ஆண்யானை, தன் தண்ணீர் வேட்கையைத் தீர்க்கப் பருகாமல், பெண் யானைக்கு முதலில் நீரை ஊட்டிவிட்டு, எஞ்சிக் கிடப்பதைப் பின்னர் பருகுமாம். ஆண் யானையின் அந்த அன்பின் வெளிப்பாட்டை இவ்வாறு அழகுற எடுத்துக் காட்டுகிறது பாலைக்கலி.

துடி அடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடி ஊட்டி பின் உண்ணும் களிறு

அவ்வாறு மற்றுமொரு காட்சி! காட்டிலே, தன்பால் அன்பு கொண்ட பெண்புறா, வெம்மையைத் தாங்க முடியாமல் வருந்திக் கொண்டிருக்க, ஆண் புறா தன் மென்மையான இறகுகளால் வீசியபடி அதன் வருத்தத்தைப் போக்குமாம். அந்தப் பேரன்பை இவ்வாறு கூறுகிறது பாடல்.

அன்பு கொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென் சிறகரால் ஆற்றும் புறவு.

அந்தக் காட்டிலே மரங்கள் வாடிப்போனதால், இனிமை தரும் நிழல் இல்லை. அதனால் வருந்தித் தவித்த பெண்மான் மடப்பிணைக்குத் தன் நிழலையே கொடுத்து பேணுமாம் ஆண்மான் கலை.

இன் நிழல் இன்மையான் வருந்திய மடப் பிணைக்குத்
தன் நிழலைக் கொடுத்து அளிக்கும் கலை.

.......இல்லறம் தொடர்ந்து இனிக்கும்.

**தமிழ் அறம் மின்னிதழ்**
**வெளியிடுபவர் : மருத்துவர்.த.இராசலிங்கம். MBBS.,Dip.Diab**
**4/16, இராம் நகர். தூத்துக்குடி.**

# சங்க இலக்கியத்தில் உவமையழகு
# கலித்தொகை -- நெய்தற்கலி

சூதாடுபவர்கள், சூதாடும் இடத்தில் தாங்கள் எதிர்பார்க்கும் பயன் கிடைக்காத போது, மீண்டும் மீண்டும் சென்று கவறு (சூதாடும் கருவி) உருட்டுவார்கள். சூதாடும் கழகத்தை விட்டு அவர்கள் செல்வதில்லை. அதேபோல், மீன் பிடிக்கும் தோணிகள் செல்லும் கடற்கரை ஓரத்திலே கடலலைகள் கரையிலே வந்து அடிக்கடி மோதும். அப்போது கடலோர மணலிலே ஓடிவிளையாடியபடி யிருக்கும் நண்டுகளை, அலைகள் அலைக்கழிக்கும். எவ்வளவு முறை அலைக்கழித்தாலும், மீண்டும் மீண்டும் அவை ஓடியாடும் வழக்கத்தைக் கைவிடுவதில்லை. இவ்வாறு சூதர்களை நண்டோடு ஒப்பிட்டுள்ள உவமையழகு நெய்தல் நிலத்துக் கடற்கரைக் காட்சியாகக் காட்டப்பட்டுள்ளது.

**இவர், திமில், எறிதிரை ஈண்டி வந்து அலைத்தக்கால்,**
**உவறு நீர் உயர் எக்கர், அலவன் ஆடு அளை வரி,**
**தவல் இல் தண் கழகத்துத் தவிராது வட்டிப்ப**
**கவறு உற்ற வடு ஏய்க்கும், காமரு பூங் கடற் சேர்ப்ப!**

நெய்தல் நிலத்துக் கடற்கரைக் காட்சிகள் பல இடங்களில் உவமையழகுடன் எடுத்துக் காட்டப்பட்டிருந்தாலும், இந்தக் காட்சி அப்படியே உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாக உள்ளது. மாலைக் காலத்திலே கடலலைகள், கடலிலிருந்து தம் துணையோடு இரட்டை இரட்டையாக எழுகின்ற வலம்புரிச் சங்குகளைத் திரண்ட மருப்பாகவும், வீசும் பெருங்காற்றைப் பாகனாகவும் கொண்டு தன்னைச் சூழ்ந்திருக்கும் கரையாகிய மணல்மேடுகளைப் பாய்ந்து பாய்ந்து உடைக்க முயல்கின்றனவாம். அது எப்படி இருக்கிறது என்றால், வேல்கள் செறிந்த நெடுங் கதவின் உள்ளே படையணிகளைக் கொண்டிருக்கின்ற கோட்டையைப் போர் வெறிகொண்ட யானைகள் தம் கொம்புகளால் உடைக்க முயல்வது போல் இருக்கின்றதாம்

**துணை புணர்ந்து எழுதரும் தூ நிற வலம்புரி**
**இணை திரள் மருப்பாக, எறி வளி பாகனா**
**அயில் திணி நெடுங் கதவு அமைத்து அடைத்து அணி கொண்ட**
**எயில் இடு களிறே போல் - இடு மணல் நெடுங் கோட்டைப்**
**பயில் திரை, நடு நன்னாள், பாய்ந்து உறூஉம் .......**

..........உவமையழகு தொடரும்,

மரு.த.இராசலிங்கம்





## மக்கள் சக்தி இயக்கம் மாநிலச் செயற்குழுக் கூட்டம். திருச்சி

மக்கள் சக்தி இயக்கத்தின் மாநில மாவட்ட நிருவாகிகளின் ஆலோசனைக் கூட்டம் 28.06.2026 அன்று திருச்சியில் மாநிலத் தலைவர் மருத்துவர். த.இராசலிங்கம் தலைமையில் நடைபெற்றது. மாநிலப் பொதுச்செயலாளர் தஞ்சை முனைவர்.லெ.பாஸ்கர், மாநிலப் பொருளாளர். திருச்சி கே.சி.நீலமேகம் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாநிலத் துணைத்தலைவர்கள் பெரம்பலூர் முனைவர். தமிழ்ச்செம்மல் க. பெரியசாமி, மதுரை வழக்கறிஞர் அ. அசோகன், மாநிலத் துணைச்செயலாளர்கள் கரூர் பொறியாளர்.மு.சுகுமார், திருச்சி தொழிலதிபர் இரா.இளங்கோ, மாவட்டச் செயலாளர்கள் தூத்துக்குடி வீ.கந்தசாமி, மதுரை பெ.சேகர், தஞ்சை முனைவர். முருகானந்தம், திருச்சி குமரன், பெரம்பலூர் க.சிவக்குமார், கரூர்.வெ.பி முத்து மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் வன்னியராஜ், முனைவர்.கா.செல்வக்குமார், ஆசிரியர்.சி.சீனிவாசன், பூதலூர் பாலதண்டாயுதபாணி, வெங்கடாசலம், செ.இரவி, அன்பில் சண்முகம், அசோக், தாமோதரன், விஜயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்கள்**

1.மத்திய அரசு, இந்திய ஆறுகளை தேசியமயமாக்க வேண்டும்.

2.போதை ஒழிப்பு நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் விரைவுப்படுத்த வேண்டும்.

3.சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் தங்கள் சுயநலத்துக்காகப் பதவி விலகினால் அவர்கள் பத்து ஆண்டுகள் தேர்தலில் போட்டியிட தடைவிதிக்க வேண்டும்.

4.மேலும் தேர்தலுக்கான செலவை அவர்களிடமிருந்து வசூலிக்கும் வகையில் சட்டம் இயற்ற வேண்டும்.

5.தேர்தலில் ஒருவர், ஒரு தொகுதிக்கு மேல் போட்டியிட தடைவிதித்து சட்டம் கொண்டுவர வேண்டும்.

6.உடல் உறுப்புகளை, மூளைச்சாவு அடைந்த பின்னர் தானம் செய்யும் உடலுக்கு அரசு மரியாதை செலுத்துவதுடன், குடும்ப சூழ்நிலைக்கேற்ப, நிதி உதவியோ, குடும்ப உறுப்பினருக்கு அரசுப் பணியோ வழங்க வேண்டும்.

**முக்கிய முடிவுகள்**

1.சுதந்திர தினத்தை முன்னிட்டு பள்ளிகளில் போதை ஒழிப்போம், புத்துலகம் காண்போம் என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டி நடத்துவது.

2.வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தலில் கட்சிக்கு அப்பாற்பட்டு நேர்மையானவர்களை மக்கள் சக்தி இயக்கம் ஆதரிப்பது போன்ற சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

# தமிழக உரிமை.....

முல்லைப்
பெரியாறு
முள்ளாகிக்
குத்துதடா!

மேகதாது
காளையாகி
அணையென்று
முட்டுதடா!

விடியலைத்
தடுக்கும்
வீண்
பிடிவாதம்!

தமிழக
உறவை
தடுக்கும்
எதிர்வாதம்!

மனமுடைந்து
காவிரித்தாய்
மருத்துவமனை
போகமாட்டாள்!

தமிழின்
உரிமை காப்போம்!
தகைமை
பெருமை சேர்ப்போம்!

கவிஞர்.கலியுகன் கோபி
சென்னை

# போராட்டம்....

தெருவெங்கும் போராட்டம்
திக்கெட்டும் போராட்டம்
கருமங்கள் ஆற்றிடவே
காளையர்கள் போராட்டம்!

தேர்ந்தெடுத்த போராட்டம்
தேர்வகற்றப் போராட்டம்
தர்மங்கள் போற்றிடவே
தங்கையர்கள் போராட்டம்!

ஊரெங்கும் போராட்டம்
உணர்வுடனே போராட்டம்
அரும்பணிகள் ஏற்றிடவே
ஆர்வலர்கள் போராட்டம்!

போரில்லாப் போராட்டம்
பொறுப்புடனே போராட்டம்
சீர்மைதனை சாற்றிடவே
செம்மையான போராட்டம்!

தார்மீகப் போராட்டம்
தன்னெழுச்சிப் போராட்டம்
பார்உயர்வு பெற்றிடவே
பாடுபடும் போராட்டம்!

யாருக்கா(ன) போராட்டம்?
யாவருக்கா(ன) போராட்டம்
மாறுதலும் மாற்றிடவே,
மனிதகுலம் பாராட்டும்!

(“நீட்” எதிர்ப்பு போராட்டம் குறித்தக் கவிதை)

மரு.த.இராசலிங்கம்